**ARTICLE 50 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00067**
Vol. 20, No. 01 (October 2026) – Part II | pp. 149–152
Received: 1 October 2026 • Accepted: 3 October 2026

# திருக்குறளில் உணவும் மாற்கு நாவலின் பசி நோயும்

**கஸ்தூரி கி[1,*], முனைவர். ரந்திர்குமார் ஆ[2]**
[1]பதிவெண்: 241110701023 ,முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர் ,மதிதா இந்து கல்லூரி ,திருநெல்வேலி., India
[2]ம.தி.தா. இந்துக் கல்லூரி, திருநெல்வேலி., India
***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** கஸ்தூரி கி — tamilseminar12@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்
இவ்வாய்வில் பசியின் கொடுமை நிகழ்வுகள் விவரிக்கப்பட்டுள்ளன. மேலும் மக்கள் படுகின்ற இன்னல்களும் அதற்கு மூல காரணம் பசியே ஆகும். பசியின் காரணமாக அனைத்து சாதி மக்களிடமும் தன்னுடைய தன்மானத்தை இழந்து தவிக்கும் நிலையினை கட்டுரை மிகத் தெளிவாக ஆராய்கிறது.

**Keywords / திறவுச் சொற்கள்:** பசியின் கொடுமை - மக்களின் வாழ்க்கை நிலை - உயர்சாதியினரின் வர்க்கநிலை - தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சனைகள் - சமூகநிலை - பொருளாதாரச் சிக்கல்.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** கி, க., & ஆ, மு. ர. (2026). திருக்குறளில் உணவும் மாற்கு நாவலின் பசி நோயும். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 2, –.

## முன்னுரை

பசிப்பிணி என்னும் பாவி சமூகத்தில் அதிகமான பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது. அந்த பசியை இந்த சமூகம் பல்வேறு வகையான செயல்களில் ஈடுபட்டு வருகின்றன. மேலும் இப்பசியினைப் பற்றி சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியம் வரை அனைத்தும் பேசுகின்றன. அவற்றில் பசியின் கொடுமையையும் அதனால் வரும் பிரச்சனைகளையும் ஆராய்வது கட்டுரையின் நோக்கமாக அமைந்துள்ளது.

## மாற்கு நாவல்களில் பசி பற்றிய செய்திகள்

மாற்கு அவர்கள் பல்வேறு வகையான நாவல்களை எழுதியுள்ளார். அவருடைய நாவல்களில் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கை நிலைகள், அவர்களின் இன்னல்கள் போன்றவை குறிப்பிடப்பட்டுள்ளன. இதிலும் மனித சமூகம் பசி என்னும் போர்வைக்குள் படுகின்ற இன்னல்களை தனது அனுபவத்தின் மூலம் வெளிப்படையாக கூறியுள்ளார். தனது படைப்பில் வருகின்ற கதாபாத்திரங்கள் அனைத்தும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த ஆண் பெண்களை மையமாக வைக்கும். அவர்கள் படுகின்ற இன்னல்களை முன்னிலை வகிக்கும் நாவல்கள் அவற்றுள் குறிப்பாக சுவர்கள், யாத்திரை, மறியல், மீள்வெளி, வருவான் ஒரு நாள், யாத்திரை போன்றவை ஆகும்.

இந்த நாவல்கள் அனைத்தும் பொதுவாக தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வில் ஏற்படுகின்ற பிரச்சனைகளை கூறுவதுடன் அவர்கள் சமூகத்தில் வாழ்வதற்கு தேவையான அடிப்படை ஆதாரமாக கருதப்படுகின்ற

உணவிற்காக போராடுவதாக அமைகிறது. மனித வாழ்விற்கு மிகவும் அடிப்படையான ஒன்று உணவு, அடுத்தபடியாக உடை, அடுத்தபடியாக இருப்பிடம். இவை மூன்றும் மிக இன்றியமையாத ஒன்று ஆகும். அடிப்படை தேவையே தன்னிடம் இல்லாத போது ஒரு மனிதன் எப்பொழுதும் தன்னிறைவு அடைய முடியாது.

## திருக்குறளில் மருந்து என்னும் அதிகாரம்

மருந்து என்பது பிணிகளை தீர்க்கும். ஆனால் உணவே மருந்தாகவும் பயன்படுகிறது. அத்தகைய உணவே மக்களுக்கு கிடைப்பது மிகவும் கடினமான ஒன்றாக அமைகிறது.

நோய்க்கு காரணம் வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்றும் அளவுக்கு அதிகமானாலும் குறைந்தாலும் உடலில் நோய் உண்டாகும். இதனையே குறள் 941 கூறுகிறது:

## பசித்து உண்பதே சிறப்பு

உடலுக்கும் காலத்துக்கும் சுவைக்கும் ஏற்ற உணவை விருப்பம் போல் அல்லாமல் நோய் வராத அளவு ஒருவன் உண்பானையில் அவனது உயிருக்கு பிணிகளால் துன்பம் நேராது என்பது வள்ளுவனின் வாக்கு. இதனையே

## மாற்கு எழுதிய நாவலில் உணவு பற்றிய செய்திகள்

மாற்கு எழுதிய நாவலில் உணவு பற்றிய செய்தி கிடைத்துள்ளன. இதில் தலித் கிறிஸ்தவர்களை 10 அம்சத் திட்டங்களை திருச்சபை அறிவித்திருக்கு. அதற்காக அதை செயல்படுத்த நாம் உண்ணாவிரதம் இருக்க வேண்டும். பசியை எப்படி தாங்குவோம்? பசியால் இருப்பது அவர்களுக்கு ஒன்றும் புதிது அல்ல. ஒருவேளை பசியால் இருந்தாலும் அடுத்த வேலை கூலோ கஞ்சியோ ஏதோ கிடைக்கும். தொடர் பட்டினியால் இருந்ததில்லை.

இங்கே ஒரு வீட்டில் ஒரு கிழவி காலையில் இட்லி சுட்டு விற்கும் கேள்விப்பட்டேன். அந்தக் கிழவியை எழுப்பி இட்லி சட்னி செய்ய கூடமாட வேலை செஞ்சுகிட்டு இருந்து வாங்கி வந்தேன். (மாற்கு, மறியல், ப.43)

நேரம் நண்பர்களைக் கடந்து விட்டது. அனைவரும் பசியில் இருந்தனர். பசியுடன் அவர்களை அழைத்துச் செல்ல அவர் விரும்பவில்லை. அந்த நகரத்தில் உள்ள மிகச் சிறந்த அசைவ உணவகத்திற்கு அவர்களை அழைத்துச் சென்றார். தங்கள் வாழ்நாளில் முதன்முறையாக அத்தகைய உணவகத்திற்குள் நுழைந்த சிறுவர் சிறுமியர் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தார்கள். அவர்களது திகைப்பை புரிந்து கொண்ட தலைவர் கை கழுவும் இடத்திற்கு அழைத்துச் சென்றார். அனைவரும் கைகழுவினர். பின்னர் அவர்களை இருக்கையில் அமரச் சொன்னார். ஒவ்வொருவரும் தங்களுக்கு வேண்டியது தாங்களே வாங்கிக் கொள்ளும்படி சொன்னார்.

அப்பொழுது ஒரு சிறுமி மட்டும் உண்ணாமல் தனக்கு முன்னால் உள்ள உணவை பார்த்துக் கொண்டு இருப்பதை அவர் கவனித்தார். தனது இடத்திலிருந்து எழுந்து சென்ற அவர் அச்சிறுமியிடம், “என்னம்மா நீ கோழி சாப்பிட மாட்டாயா? அப்படின்னா சொல்லு..... வேற காய்கறி சாப்பாடு

கொண்டு வரச் சொல்லவா?" என்று பரிவுடன் கேட்டார். அவர் சொன்னதை கேட்டதும் அந்தச் சிறுமி அழ ஆரம்பித்தாள். முதலில் சிறு கேவலமாக குறிப்பிடப்பட்ட அழுகை பலத்த அழுகையாக வெளிப்பட்டது. விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள். உன்ன வந்த சிறுமி ஒருத்தி அழுவது அங்கு பணிபுரிந்தவருக்கு வித்தியாசமாகப்பட்டது.

*"போலீஸ்காரங்க பிடிக்கணும்னு சொன்னதும் எங்க எல்லாரும் ஊரைவிட்டு காட்டுக்குள்ள ஓடினோம். அப்படியே ஓடி அடுத்த ஊருக்கு போயிட்டோம். எனக்கு ரொம்ப பசிச்சது. எங்க ஐயாகிட்ட எனக்கு ஏதாச்சும் வாங்கித் தரச் சொல்லி அழுதேன். கொஞ்சம் பொறுத்துக்கோ, அடுத்த ஊர்ல நம்ம சொந்தக்காரங்க இருக்காங்க; அங்க போய் சாப்பிடுவோம் என்று சொன்னாரு. நான் கேட்கல; பசிக்குதுன்னு அழுவேன். அப்ப ஒரு டீக்கடைக்கு கூட்டிட்டு போனாரு. அங்க வந்த போலீசு எங்க ஐயாவ பிடிச்சுட்டு போயிட்டு, அங்க வச்சு எங்க ஐயாவ ரொம்ப அடிச்சாங்க" என்று சொல்லி அந்தக் குழந்தை அழுதது. அதனால் உணவை பார்த்தவுடன் எனக்கு அழுகை வருகிறது என்று கூறியது. (மறியல் நாவல், பக்கம் 366, 367)*

இந்த நாவலில் குழந்தைக்கு தேவையான உணவு முதலில் கிடைக்கவில்லை. பின்னர் ஒருவர் மூலம் அந்த உணவு கிடைக்கும். அந்த உணவினை பார்க்கும்போது அந்த உணவினால் ஏற்பட்ட அடியும் வேதனையும் மட்டுமே நினைவில் வருகிறது. அதனை கண்டு அந்த குழந்தை வருந்துகிறது. அன்று பசியால் ஏற்பட்ட நோயை இன்று உணவு இருந்தும் அதனை தீர்க்கும் மருந்தாக அமையவில்லை என்பதே இந்த நாவலின் கருத்தாக உள்ளது.

### பசியால் வருந்திய ஒரு ஹரிஜன் இளைஞன்

பசியால் வருந்திய ஒரு ஹரிஜன் இளைஞன் அம்பலக்காரரின் வயலில் இறங்கி சிறிது நெல்லை கசக்கி, அந்த நெல்லை கொண்டு போய் கடையில் விற்று, அந்தப் பணத்தை வைத்து ஒரு மணி நேரம் வயிறு நிறைய ஏதோ ஒன்று இருக்கின்றான். இதை தெரிந்து கொண்ட ஒருவன் தனது ஜாதியைச் சார்ந்த மற்ற கரிசனங்களிடம் கூறி, அவர்கள் அவனை பிடித்து அடித்து உதைத்து மரத்தில் கட்டி வைத்தனர். பின்பு அவனை அம்பலக்காரரிடம் இழுத்து வந்து:

*"ஐயா இவன் உங்கள் வயலில் இறங்கி சிறிது நெல்லை திருடி விட்டான் ஐயா. எங்களுக்கு படி அளக்கிற தெய்வம் உங்க வயல்லயே திருடலாமா? அவன் திருடிட்டான். தூக்கிப்போட்டு மிதிங்க. நெல்லை கசக்கி இவனது கையை வெட்டுங்க. உயிரோடு தோலை உரிங்க. எது செஞ்சாலும் சரிதான்."*

என்று கூறி பசியின் கொடுமையினை அனுபவித்தனர். (வருவான் ஒரு நாள், பக்கம் 116)

### சுவர்கள் நாவலில் உணவு

இதனைப் போன்று சுவர்கள் என்ற நாவலில் மேரி என்ற பெண்மணி தன் தந்தைக்கு உணவு கொடுப்பதற்கு இல்லாமல் கம்மங்கூழியில் கரைத்து கொடுத்துள்ளார். தந்தை உடல்நலக் குறைவால் இருப்பதால் அவருக்கு எந்த உணவும் உட்கொள்ள முடியவில்லை. அவர் இளமைப் பருவத்தில் தனக்கு தேவையான உணவு வாயார கிடைக்கவில்லை.

பின்னர் முதுமை அடைந்த பின்பு தேவையான உணவுப் பொருள் கிடைக்கும்; அதனை உண்பதற்கு அவர் உடல் ஒத்துக் கொள்ளவில்லை. எவ்வாறு உணவானது ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு பெரிய பொக்கிஷமாகவே பயன்படுத்தப்பட்டது. (சுவர்கள், பக்கம் 80)

## முடிவுரை

மக்களின் வாழ்வாதாரங்களில் மிகவும் அடிப்படையான ஒன்று உணவாகும். அத்தகைய உணவைப் பெறுவது இந்த நாவலில் உள்ள கதாபாத்திரங்கள் மிகுந்த துன்பங்களை அடைந்து பெற்றுள்ளது அறிய முடிகிறது. மேலும் இத்தகைய உணவானது அடிப்படையாக கிடைக்கப்பெற்றாலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மிகவும் பெரிய பொக்கிஷமாகவே அமைந்துள்ளது. சரியான உணவுப் பொருள் கிடைக்காததனால் அவர்கள் நோய்க்கு உள்ளானவர்களே தவிர அதிகமான உணவினை உண்டு அவர்கள் நோயால் அவதிப்படவில்லை என்ற நிலையினை இந்த கட்டுரையின் மூலம் அறிய முடிகின்றது.

## துணைநூற் பட்டியல் (References)

1. திருக்குறள் - திருக்குறள் மூலமும் உரையும், மருதநாயகம், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், 2024.
2. மீள்வெளி - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
3. வருவான் ஒரு நாள் - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
4. மறியல் - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். திருக்குறள் மேற்கோள்கள் மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர் வளிமுதலா எண்ணிய மூன்று மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின் ஊறுபாடு இல்லை உயிர்க்கு

© 2026 கஸ்தூரி கி, முனைவர். ரந்திர்குமார் ஆ. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..